உ

குமரன் துணை.

மனோரஞ்சிதஉபாக்யானமென்னும்

# சதாரம் சரித்திரம்.

## விநாயகர் துதி.

கன்னிகைசதாரமெனுங் கற்புடையாள்கதைதனை
இன்னிலத்தில்நாடகமா யின்பமுடன்பாடுதற்குச்
சென்னிமிசைகங்கையணி சிவனுதவுமானைமுக
மன்னியவைங்கரவடிவின் மலரடிகடுணையாமே.

கரிவதனுவுந்தன் கருணைபுரிந்துயென்னை யென்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கணபதியேவுன் கழலினைப்பணிந்தேன்
கருணைமிகப்புரிவாய் கங்கைபெற்றோனே
குணமாகவேவந்தென் குறைதனையகற்றுவாய்
குஞ்சரமுகத்தோனே — கண
நன்னயமாகநின் நாமந்தனைநினைந்தே
மானிலத்தோர்புகழ் மங்கைசதாரத்தின்
இன்பமுறுகாதையை இன்னிலந்தனிற்பாட
எந்தனுக்கருள்புரிவாய் — கண
ஆலமுண்டகண்ட னருளியசுதனே
ஆகுவாகனமேறி அடியேன்முன்வருவாய்
பாலன்லக்ஷ்மணதாசன் பாமாலையணிந்திட
பாங்குடனித்ததியே — கண

## கலைமகள் துதி.

தாயபிராமிநீ சமையங்காரம்மணி என்ற வர்னமெட்டு.

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சரஸ்வதியேவுந்தன் தாளினைப்பணிந்தேன்
பிரமன்றன்றேவியே பின்னமில்லாதருள்வாய் — சர

புத்தகபாணியே நித்யகல்யாணியே
வித்தகியேயுனே வேண்டினேனித்தினம் சர
மங்கைசதாரத்தின் மாகதையைப்புகல
பங்கஜாஸனிநீயே பாலன்முன்வருகுவாய் சர
பக்தன்லக்ஷ்மணதாசன் பாமாலையணிந்திட
இததருணத்தினி லின்பமுடனிங்கு சர

## சத்யபுரியாள் சாரங்கஹஸ்தன் சபைக்குவருதல்.

வ ந் த ன ம்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வந்தனமதுதந்தனன் விந்தையாயுவந்தனன்
சிந்தைமகிழ்ந்தமுடன் வந்தபெரியோர்தனக்கு வந்
அந்தணர்க்குமமரருக்கும் அருந்தமிழுணர்ந்தவர்க்கும்
விந்தையுடனிந்தஅவை யுந்துகனவான்களுக்கும் வந்
பூமியாளுமன்னர்கள் பொருந்துசிம்மாசனத்திற்கும்
கோமியான்கண்டுமனமகிழ்ந்து நேயமுடனிங்குவந்து வந்
தென்மதுரைமாநகர்வாழ் தேவிமீனாட்சியம்மைக்கும்
அன்பன்லக்ஷ்மணதாசன் புகலுமருந்தமிழ்பதந்தனக்கும் வந்

## தேசவிசாரணை.

அகிலப்ரபஞ்சம் உம்மாலேயான் என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அவனிதனையோர்குடைக்கீழ் அரசுபுரிந்துவருவதெல்லாம்
நவரசமொழியுடையோனே வுந்தன்நன்மதியாலன்றோ அ

விடலாலவாயிலாய் என்ற தேவார வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

ஆலயங்கள்தோறுமாறுகாலங்களில்பூஜைகள்
சீலமாய்நடந்துவாரதைச் செப்புவாய்நீமந்திரி அ

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

அன்னசத்திரந்தோறும் அறுசுவையளிப்பதில்
பின்னம்வாராமலேபார்த்து வாரீரோமந்திரி அ

கற்குதன் ஹாமுரேஜேதோஸ்தோகுல் பாங்கயா என்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-சாப்பு.

பொன்புரிநூலணிந்திடும் புனிதரான அந்தணர்கள்
நான்குவேதந்தன்னை நாளும்நலமுடனே யோதுமூரா
நவிலுவாய் நவிலுவாய் நவிலுவாய் நவிலுவாய் பொன்

கந்தார்த்தம் வர்னமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

இறைவர்கள்பகுதியினை யெவ்வாறளிக்கின்றார்
யெடுத்துரைப்பாயதனை இ
ஆக்கினைப்படியே வாக்குப்பிசகாமல்
சேர்க்கையுடன்கொடுத்து யேற்கையாய்வாழ்ந்திடும் இ

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

மாதமும்மாரி மாறாமல்பெய்யுதா மதியிலுயர்ந்த மந்திரி
திதனுகாமலே சிறப்புடன்குடிகள் வசிப்பதைச்சொல்லுமந்திரி மா

## சுவேதசச்சந்திரன் சபைக்குவருதல் வந்தனம்.

சொல்லாது என்ற வர்னமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வந்தனம்மைந்தன் மிகத்தர்தனம் சிந்தைமகிழ்ந்திங்ஙனம்
மந்தஹாசத்தோடுந்துமெவர்க்கும் வந்
மதியோர்க்கும் மாண்புறமிப் பதியோர்க்கும் மாகனகதியோர்க்கும்
மலர்க்கரங்குவித்தி லக்கியத்துடன் வந்
நல்லோர்க்கும் நற்றமிழின்வல்லோர்க்கும்
நன்குறையுமெல்லோர்க்கும் நலமாய்லக்ஷ்மணதாசனுக்கும் வந்

## சுவேதசச்சந்திரன் பிதாவுக்கு வந்தனஞ்செய்தல்.

ராமமுகி பிரணதபால என்ற வர்னமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தந்தையேவுந் தாளிணைக்கு
தூயன் சரணம் சரணஞ் சரணம் தந்

சிந்தைமகிழ்ந்தேயுகந்து
சுந்தரச்சிம்மாசனந்தனக்கும்
சிறுவன் பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன் தந்

சரணம்.

அடியேனையிங்குவர
அழைத்த விபரந்தன்னை
அறியச்சொல்வீர் சொல்வீர் சொல்வீர் வந்

## பிதாவின்சொற்கேளாத சுவேதன் காருக்கிரகத்தில் புலம்புதல்.

இராகம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்கேதான்போனாயோ ஓசிவமே யெந்தனைமறந்தாயோ எங்

அநுபல்லவி.

மங்கையோர்பாக மமைந்திடுங்கரமே
திங்களணிந்தவா திகழ்சடைபரமே எங்

சரணங்கள்.

தந்தையின்வார்த்தையை தவிர்த்துவந்தேனேபாவி
எந்தவிதத்தினி லினியான்மீளுவேன் எங்
காராக்ரகந்தனில் கலங்குறேன்தனிமையாய்
மாரன்றனையெரித்து மறலியையுதைத்தவா எங்

## சுவேதன் சதாரத்தை வர்ணித்தல்.

கலித்துறை.

வண்டோவிழிநுதல் வான்பிறையோவல்குல் மான்குளம்போ
செண்டோமுலைநித் திலமோநகையிடைச் சேர்துடிகற்
கண்டோமொழிகுறல் காரோமுகங்கம லம்பவளத்
துண்டோயிதழ்கன்னித் தண்டோதுடையிந்தத் தோகையர்க்கே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பூரணச்சந்திரபிம்பமோ எங்கள்
புத்தியைமயக்கவந்த சித்தினிச்சாதிப்பெண்ணிவள் பூர

அநுபல்லவி.

சுரருந்தவமுனி வரருமுலகினில்
நரருமதிசயிக்க நீணிலத்தோர்புகழ் பூர

சரணங்கள்.

கோதிக்குழல்வகிர்ந்து சோதிப்பணிபுனைந்து
ஜாதிமலரணிந்து கியாதியுடனமர்ந்து
சரசமதுரமொழி சுரஜதியெனும்விழி
விரிகளடைந்தமுலை கரிகளணையமுகம் பூர

## சதாரம் சுவேதனை வர்ணித்தல்.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி-கண்ணிகள்.

இந்தவிதஅலங்கிருதம் ஈரேழுலகிலுமில்லை
அந்தமாயென்முன்னேநிற்கும்
அருமைமன்னனைப்பார்க்க இங்
கோடிச்சந்திரன்கூடினாலும் கொற்றவர்முகம்போலாமோ
சேடனாலும்சொல்லொணாத
சுந்தரர்க்கிணையாகவே இங்

## சுவேதன் சதாரத்தை வர்ணித்தல்.

கலித்துறை.

தடமதில்வீழ்ந்து தானமேசெய்து சந்தியாவந்தனமுடித்து
தடமதிலிருந்து கடவுளைத்துதித்துத் தவம்புரிவதிற்பயனில்லை
தடமதிவதன மடமகளீந்தம் தண்மணஞ்சார்ந்திடுமல்குல்
தடமதிலாழ்ந்தாற் றகுபயன்கிடைக்கும் சடுதியிற்றாரணிமீதே.

இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவள்தான் இவள்தான் இவள்தானெனக்குகந்த
இன்பந்தரும் கண்ணாட்டி யிவள்தான் இவ

அநுபல்லவி.

அவனிதனிலேயிவள் அழகினுக்குவமானம்
யாரொடுத்துச்சொன்னாலும் அடைவார்களவமானம்
ஆசையாய்க்கட்டி அணையப்பார்ப்பவள்
ஆதரத்தொடு காதல்தீர்ப்பவள் இவ

சரணங்கள்.

அழகுதிரண்டடங் கமைந்ததோயிருகொங்கை
அரும்பிமலர்ந்தசெழுங் காந்தள்புஷ்பமோசெங்கை
யழகியகதிர்வேலோ விழியென்றுசொல்லசங்கை
பாடுவார்கள் புலவோரொன்று லிந்தத்திருநங்கை

பருவமறிந்துநான் மருவிசுகிக்கவே
அருவமன்மதன் கெருவமொழிக்கவே இவ

மார்கழிமாதத் திருவாதிரைநா ளென்ற வர்னமெட்டு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அருமைமன்னனழகினைக்கண்டு அங்கம்பரவசமாகுதே
சாரவசனுமிருதந்தனைப்பார்த்துச் சேரவுமையலாகுதே அரு
சுந்தரவதனனின் சொகுசதைக்கண்டு சோருதேயெந்தனுவி
எந்தவிதமுமிந்நாதனைச்சேர வெண்ணமுங்கொள்ளுதே அரு

சுவேதன் தாய்தந்தையருக்கு தேறுதல்சொல்லி கானகம்புறப்படுதல்.

மேரிஜான் ஸாவல்யாபியாருரோ என்றவர்னமெட்டு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சஞ்சலப்படவேண்டாம்
தந்தைதாயாரோநீவிர் சஞ்

அநுபல்லவி.

கொஞ்சநாளைக்குள்ளே குவலயம்சுற்றியே
அஞ்சலிலோடிவாறேன் அனுப்பும்விடைகொடுத்து சஞ்

சரணங்கள்.

மைந்தனுக்குவதுவை முடிக்கிடக்கருதியே
அந்தமுள்ளவரசு பதிதனையகன்றீர்
திறமிகுமெந்தன் றந்தையேயேதுரைப்பேன்
மறுநகர்சென்று வருமளவும்நீங்கள் சஞ்

சுவேதனும் சதாரமும்ஆரண்யம்செல்லும்போதுயிருவருக்குந்தர்க்கம்

இ-ம்-காபி-தாளம்-ஆதி.

சதாரம் சொல் பல்லவி.

சண்டாளியோ நானுமக்கு
சகலரும்புகழுமன்னா சண்

அநுபல்லவி.

முண்டகக்கிழவனமைத்த
முடிவையறிந்திலேனோ சண்

சுவேதன் சொல் பல்லவி.

பெண்ணேயெந்தன் கண்மணியே
பேதைபின்வரலாகாதே — பெ

அநுபல்லவி.

அன்னை தந்தையர்க்குதவியாய்
அகந்தனிலேயிருப்பாய் — பெ

சதாரம் சரணம்.

பாவினுனென்னைப் — பார்த்தநேரமோ
பக்ஷம்வையா — தென்னமாயமோ
நாவினுலென் — துயரையெடுத்து
நவிலக்கூடுமோ — நாதா — கண்

சுவேதன் சரணம்.

உன்னைக்கூட்டிச் — செல்வேனுனல்
உலகிலுள்ளோர் — நகைப்பார்
என்னைப்பார்த்துப் — போகவிடை
கொடுப்பாயிளமயிலே — இயம்புவாயேகுயிலே — பெண்

சதாரம் சரணம்.

இந்தவிதி — வருமென்று
யெண்ணுமற் — போனேனையோ
அந்தமுள்ள — நாடியிழந்து
அடியாள் — தனைப்பிரிய — கண்

## ஆரண்யத்தில்வந்து தாகவிடாயால் வருந்தல்.

கண்ணிகள்.

இ-ம்-தேசிகமுகாரி-தாளம்-ரூபகம்.

கானகத்தில்நாமலேந்து கதறவிதிவசமோ
மானிடர்யாவருமிங்கே வாசஞ்செய்யக்காண்கிலேனே — கான
ஆரண்யத்தில்வந்துநின்று அலறவிதிவசமோ
ஆருமிலாப்பரதேசிபோலே அலையுமேமிதற்கென்செய்வோம் — கான
அரசுபதியிழந்து அடவிதனிலேவந்து
கரடிபுலியானேசிங்கம் கடுவாய்ப்பன்றிகள்வாழும் — கான
தாகவிடாயாகுதையோ தயங்குதேமனதுமிக்க
சோகமுமேலாகுதே சுந்தரியேயேதுசெய்வேன் — கான

சுவேதன் சதாரத்தினிடம் எவ்விதம் உஜ்ஜீவிப்போமென வருந்தல்.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்குவோம் பெண்ணே இனி
யேதுசெய்குவோம் கண்ணே.

அநுபல்லவி.

முன்னாட்செய்தவினையோ முடிந்ததிந்தக்கெதி
சின்னாபின்னமாய்மனம் சிதறுதேமின்னரசே என்

சரணம்.

கையில்பொருளில்லாது கானகந்தனில்வந்து
உய்வகையறியாமல் மெய்யுங்கலங்குதடி என்

சுவேதன் குட்டைவிற்கச்செல்லும்போது இருவருக்குந்தர்க்கம்.

இ-ம்-தேசிகமுகாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சதாரம் சொல்லல்.

மன்னனேவுமைப்பிரிந்திம் மானிலத்தெவ்வாறிருப்பேன்
மாமுகத்தில்நின்றுவந்த வாணியையுமோவெறுப்பேன் மன்

சுவேதன் சொல்லல்.

அன்னமேயயன்விதித்த வாறுதானடக்கும்படி.
அருமதிவிதிவிதித்த வாரையுங்கடக்கும்படி அன்

சதாரம் சொல்லல்.

காசினிதனிலேயிந்த கஷ்டப்படலாமோமன்னா
யோசியாமல்குட்டைவிற்க யேகியேவருவீரிந்நாள் மன்

சுவேதன் சொல்லல்.

மாசிலாதகண்மணியே மறுதேசஞ்சென்றுவாறேன்
மங்கையேதனிமையாயிவ் வனந்தனிலேயிருப்பாய் அன்

சதாரம் சொல்லல்.

மன்னவாதுரையேவும்மை மணம்புரிந்தநாள்முதலாய்
இணைபிரிந்தறிகிலேனே யேந்திழையாளேதுசெய்வேன் மன்

சுவேதன் சொல்லல்.

ஓரடியெடுத்துவைக்க யீரடிபின்னிழுக்குதையோ
பாரடியெனைத்திரும்பி பாவையேநான்சென்றுவாறேன் அன்

### சுவேதன் குட்டைவிற்கச்செல்லும்போது புலம்பல்.

"பெனிடாரோ பியாரோடாலும் பெனிடாலுரு" என்றவர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னசெய்வேன் எங்குசெல்வேன் எவ்வண்ணமுய்வேன்
பன்னகாபரணம்புனே பரமனேயின்று என்
மன்னவனுய்ப் பிறந்திந்த மானிலத்தனில்
நன்னகர்தனையிழக்க நான்முகன்சதியோ என்
பதியுடன்வெகுநிதியிழந்து பவுசுங்குன்றியே
விதிவசத்தால்குட்டைவிற்கத் தனிமையாகவே என்

### மாயோன் சபைக்குவருதல்வந்தனம்.

வாசுதேவனே வந்தாளுமெந்தனே என்ற வர்ணமெட்டு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வந்தனந்தந்தேன் சுந்தரமதாய்
விந்தையுடனே வந்தசபையோர்க்கே வந்
அந்தணர்கட்கும் அமரர்தமக்கும்
அருந்தமிழ்நன்னூ லறிந்தவர்கட்கும் வந்
கற்றவர்களேநிதி யுற்றவர்களே
கருணைவைத்துக் காப்பாற்றுவீர்களே வந்
பிழைகளிருந்தாலுமிகப் பொறுமையுடனே
மழலைசொற்கேட்டு மகிழ்ந்திருப்பீரே வந்
நனைகொள்மா மதுரைநகரில்வாழ்
தனையன்லக்ஷ்மண தாசன்கவிக்கும் வந்

### தேசவிசாரணை.

இ-ம்-அமிர்தகல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நகரத்தில்யாதேனும் விசேஷமிருந்தால
நவில்வீரெனக்கதை நலமாக
மகிதலம்புகழுநன் மதியுள்ளமந்திரி
வழுத்துவீரெனக்கதை விபரமாக
வேதியரனைவரும் நீதியுடனேயாகம்
வேண்டிவருகின்றாரா
மாதமும்மாரி மாறாமல்பெய்து
மகிழ்வுடன்ப்ரஜைகள் வாழ்கின்றாரா நக

சிற்றரசர்கள்கப்பம் செலுத்திவருகிறாரா
செப்புவீரெனக்கதைச் சீராக
கற்றவர்தொழும் கனமுள்ளதந்திரி
கருத்துடனுரைசெய்வா யப்போதே ௧௧

மாயோன் குட்டையைப்பார்த்து வர்ணித்தல்.

இ-ம்-இந்துஸ்தான்பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்தக்குட்டையைப்பார்க்கமந்த்ரி விந்தையாகத்தோணுதே
அந்தமுடனே யமைத்ததாரோ அறிகிலேன் இந்

மாயோன் சுவேதனை விசாரித்தல்.

எந்தவூரோநீரு மிங்குவந்தகாரியமேதோ
எந்தன்முன்னேநீயுமின்று யெடுத்துரைப்பாய்வர்த்தகனே எந்

மாயோன் மந்திரியிடஞ்சொல்லி விசாரிக்கச்சொல்லல.

மேற்படி மெட்டு.

பார்க்கப்பதினாயிரங்கண்வேண்டுமே யிப்பார்க்குளே
தீர்க்கவிசாரித்தென்முன் தெரியச்சொல்லுதந்திரி பார்
கானகந்தனிலேசென்று கன்னியாள்தனையின்று
மாநகர்க்கழைத்துவந்தார்க்கு மாநிதியளித்திடுவாய் பார்

தாசி வருதல்.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தனந்தந்தேன்யான்
அந்தமுள்ள அரசே வந்

அநுபல்லவி.

மங்கையை இங்குற
வழுத்திய வகையேதோ வந்

சரணங்கள்.

மன்னவனே உந்தன்மீது
மையலாகி வந்தேனேசாமி வந்

தாசி தன் ஜாதித்தொழில்கள் கூறல்.

இ-ம்-எதுகுல்காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கோதிக்குழல்முடிப்போம் நாங்கள்
குடிகெடுக்க வழிதொடுப்போம் கோ

அனுபல்லவி.

பாதிக்கொங்கையைக்காட்டிப் பகட்டிப்பலர்பொருளை
பறிப்போம்வழி மறிப்போம் கோ

சரணங்கள்.

கச்சணிந்ததனங்கள்விம்மக் காட்டிக்
காலில்தண்டைகள் மாட்டி
கொச்சிமஞ்சளைப் பச்சையாயரைத்துக்
குளிப்போம்உடல் ஜொளிப்போம் கோ
இச்சகமாய் வார்த்தைபேசி
இருதனங்கள் குலுங்கவீசி
இச்சையாய்ப்பொருள்கொடுத்தே மாறிநிற்பவரை
இடிப்போம்யிதழ் கடிப்போம் கோ
சுந்தரமாய்க்கீதம்பாடி சூதுசெய்யச்சிந்தைநாடி
அழைப்போம்மனதைக் குழைப்போம் கோ

வசனம்.

தாசி வனத்திற்குச்செல்ல மாயோனிடம் உத்தரவுபெற்று தனிமையாய் ஆரண்யத்திலிருக்கும் சதாரத்தினிடம் சுவேதன் வரலாறு உரைத்ததைக்கேட்ட சதாரம் தாசியைப்பார்த்து வருந்துதல்.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

உற்றதென்ன சொல்லம்மா அங்கே உற்ற

அனுபல்லவி.

பெற்றதாய்தந்தைமுதல் கொற்றவர்நாடுமே
கோதையென்னு மிழந்தார்
உற்றசேதிசொல்ல ஒருவருமில்லாது
மெத்தத்தயங்குதென்னுவி ஐயோ அங்கே உற்

சரணங்கள்.

பதியிழந்துவெகு நிதியிழந்து எந்தன்
பத்தாவைத் தான்பிரிந்து
விதிவசத்தாலிந்த வனந்தனிலேவந்து
மயங்குமிப் பாவிக்கே அங்கே உற்

**சதாரம் நாயகனிறந்த சேதிகேட்டுப் புலம்பல்.**

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

மேரிஜான் சாவல்பியாரூரே யென்ற வர்னமெட்டு.

பல்லவி.

பஞ்சமாபாதகி யானேனே நான் பஞ்

அநுபல்லவி.

ரஞ்சிதப்ராண நாதனையிழந்து பஞ்

சரணங்கள்.

நாடுநகரிழந்து ராஜரீகந்துறந்து
வாடியேமெலிந்திந்த மானிலத்தோர்நகைக்க பஞ்
அன்னமென்றுவக்தோனை அலறிடச்செய்தேனோ
முன்னாட்செய்தவினையோ முடிந்ததிந்நாளில் பஞ்
குறையேதுசெய்தேனோ கொலைமிகப்புரிந்தேனோ
இறைவனைப்பிரிந்து யிந்நிலந்தனிலே பஞ்

மேற்படி புலம்பல் வேறு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

நானிருந்தென்னலாபம் மண்ணில்
நீரில்லாக் கூபம்

அநுபல்லவி.

ஆனைசேனைபரி ரதங்களுடனே
அரசுபதி யிழந்து
கானகந்தனில்வந்து கவலைமிகவடைந்து
காதலனைப்பிரிந்து குவலயந்தனிலினி நா

சரணங்கள்.

காலகெதியேதோ கர்மவினையாலிந்த
கோலமாகினேனை யோ
ஆலமுண்டகண்ட னருளிதுவோவெந்தன்
அருமைமன்னனிறந்து அநுதியாகினேனினி நா

வசனம்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டிருந்த சதாரத்தைத் தேறுதல் செய்து மாயோன் அந்தப்புறஞ்சேர்த்து மறைய இவைகளைக்கண்ட மாயோன் வர்ணிப்பது.

வெண்பா.

பந்தளவுகந்தகள பந்தனையணிந்தமுலை
கொந்தளகபந்தமு மிகுந்தமுகில்—அந்தமுள
தந்தனமெலிந்தவிடை தந்தவரிவுந்தரளம்
எந்தாக ரிந்தமயி லே.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தவுலகமோ யிம்மங்கை இவளிருக்குந்தானத்தை
யெனக்கெடுத்துனாக்காததாற் சங்கை எந்

அநுபல்லவி.

அந்தரலோகத் தரம்பையோவறியேன்
அனங்கன்வெட்கும்நடையா ளாரோநான்தெரியேன்
மந்திரன்படைத்த வடிவைக்கண்ணுற்றால்
வரருந்தவமுனி யமரருமதிகுலைவார் எங்

சரணங்கள்.

விந்தையுடையகுழல்வண்டு விகசிதமாய்
வேய்ந்ததுதலோமதித்துண்டு விளங்குமதன்
வில்லோபுருவங்களிரண்டு வேலுங்குகன்கை
மெல்லச்சென்றுகந்தன்கண்டு விரிந்ததில்
மலருங்குமிழுநாசிக் கிணைசொல்லலாமோ
யிலகுங்கத்திரியிரு காதெனப்போமோ எங்

கன்னந்தனக்குவமையேது கனியிதழைப்
பன்னுந்துப்பென்றாலுமொண்ணாது பற்களைத்திகழ்
முல்லையரும்பென்பதுந்தீது முதிர்கரும்பு
சொல்லுக்குவமையுமாகாது சுதர்சனத்தைக்
கண்டந்தனக்குமுயர் கமுகுபுயநிகர்க்கும்
மண்டலந்தனில்மதி மயங்கிடுமெவர்க்கும் எங்

இதுவும் ஷை சொல தரு.

இ-ம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மருவினாலென்ஜென்ம சாபல்யமாகும்
மருவாவிடிலோயென் னாவியும்போகும்
கரமதாய்ஸ்தனம்பிடித்து கனிவாய்கடித்து
கனிவுடன்மஞ்சத்தில் கூடிவிளையாடி மரு

உத்தேசம்பதினாறு வயதுள்ளமாது
உடம்பெல்லாமணக்குதே உயர்ந்தசவ்வாது
எத்தேசராசர்க்கு மிவள்போற்கிட்டாது
என்னமோவென்பாக்கியம் கிடைத்ததிப்போது மரு

கோடாலிமுடிச்சதனிற் சாதிமலர்சூடி
கோணமற்பொட்டிட்டு மயிர்மாட்டல்மாட்டி
வாடாதமல்லிகை மலர்களைத்தூவி
வகைவகையாலீலைகள் வசந்தகூடத்தினில் மரு

இதுவும் ஷை தரு.

இ-ம-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாடிநிற்பதேதுகாரணமோ அடி
வஞ்சியைக்கெஞ்சுறேன் சொல்வாய் வாடி

அனுபல்லவி.

மோடியாகுமோவுனைத் தேடிவந்தவனெனைக்
கூடிச்சரசலீலை தாடித்தாள்பணிகிறேன் வா

சரணங்கள்.

யாராலுனக்குத்துன்பம் நேரிடலாச்சுமானே
கூறுயெமபுரத்தைச் சேரச்செய்குவேன்பாராய் வா
காமனால்வருந்தியோடி கஞ்சமுகங்கள்வாடி
குமாசுராகம்பாடி கலந்தணைகுவோம்வாடி வா

## இருவருக்குந் தர்க்கம்.

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பெண்.

செல்லாதுஉந்தனுரை பொல்லாதுதீவிரமாய் நில்லாது
ஜடுதியிலுன்னிடமணுகுவாய் செ

ஆண்.

மங்கையேமாதுயிள நங்கையே மகிழ்வுடனிங்கேயே
மதிகதிரால்வாடுகின்றேன் மங்

பெண்.

மட்டியே எந்தனைநீகிட்டியே வாசகத்தைக்கொட்டியே
மதிமருண்டிடவிதிவந்திடுமோ மட்

ஆண்.

கொங்கையைச் செங்கையாலேபிடித்து அங்கமதிலேயழுந்த
அடைவுடன்வாராயரிவையேவுந்தன் கொ

பெண்.

கொண்டான்போல் கண்டமொழி விண்டுளென் அண்டையினில்
நின்றிடும்குடிகேடனேகொடியபாவி கொ

ஆண்.

சுந்தரீ யிந்தவேளைவந்துநீ யெந்தனையே ஆதரி
யெழில்மலர்ப்பாதமளத்தித்தொழுதேன் சுந்

## சதாரம் சொல்லல்.

இ-ம்-தனசாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பஞ்சமாபாதகம் படராதோ யென்
பாவம்வந்துவுன்னைத் தொடராதோ பஞ்

அவனியில்யாவரோனும் அநீதம்செய்தாக்கால்
அவர்களைத்தண்டிப்ப தரசர்க்கழகன்றோ பஞ்

பரதாரந்தனைச் சேரலாகுமோபார்க்குள்
புரவலனேவீணில் புலம்பவேண்டாம் பஞ்

தாவிப்பிடிக்க வாராளென்னைக்கூவி
பாவிதெய்வமேயிங்கு பதறுதென்னாவி பஞ்

மாயோன் சொல் கலித்துறை.

உனக்கின்றியான்செய்த குற்றமொன்றில்லை யுனைப்பிரிந்தால்
வனக்குன்றிலேறி விழவறியேன்வண்மை சேர்மயிலே
எனக்கென்றுவட்டமிட் டண்ணாந்துவிம்மி யிருக்குமுன்றன்
தனக்குன்றிலேறி விழுவேனின்னல்குற் றடாகத்திலே.

ஷ தரு இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

அனமேவந்தணைவாய் அற்புதமிகும் அனி

அனுபல்லவி.

அனங்கனால்வாடி அலைகிறேனேயடி அன

சரணங்கள்.

பாரவில்கொண்டு பாவிமுன்னின்று
மாரன்செய்வாதையால் வாடுறேனேயின்று அன

சதாரம் சொல் தர்க்கம்.

ஷ வர்னமெட்டு.

பல்லவி.

என்னடாயிந்தமதி உனக்குவந்த என்

அனுபல்லவி.

அன்னமேயென்று அறைகிறாயின்று என்

சரணங்கள்.

தாசியென்றெண்ணிப் பேசுறாய்நண்ணி
சீசீநில்லாதே செல்லுஇப்போதே என்

மாயோன் சொல் கலித்துறை.

காதலியேயுன் றிருத்தனபாரத்தைக் கைப்பிடித்துச்
சீதளமாமுகத் தோடென்முகம்வைத்துச் செவ்விதழ்த்தேன்
ஆதரவாகப் பருகிக்கலந்திட வாசையுற்றேன்
மாதரசேகடைக் கண்ணருள்வாய்மிக வந்தனமே.

## தர்க்கம்.

என்னடிநான்பெற்ற மங்கையென்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.
இ-ம்-மோகனமுகாரி-தாளம்-ரூபகம்.

### மாயோன் சொல்லல்.

என்னடி இன்னமும்மோடி தகுமோடி
சகிவர்டி யெனைத்தாவியொரு முத்தந்தாடி அடி
இத்தனைகோப மெதற்கு சித்தினிமாதேவுனக்கு
ஏீதினி நில்லாதென்னாவி
மேதினியில் நானோர்பாவி இந்த

### சதாரம் சொல்லல்.

போதனைசெய்யாதேபோடா தகுமோடா முழுமூடா
நல்லபுத்தியில்லாக் குடிகேடா அடா
பொல்லாதுன் மனஸ்தாபம்
சொல்லாதுபரிதாபம் போதுமடாயிந்த்ரஜாலம்
பலிக்காதடாநீ கொண்டகோலம் போ

### மாயோன் சொல்லல்.

சித்தினிச்சாதிப்பெண் மானே
பசுந்தேனே சகிமானே வுந்தன்
பார்வையிலேசொக்கி னேனே அடி
பலவிதமானகாமக் கலவிகள்நாமேசெய்ய
பஞ்சணைக்குச்சற்றே வாடி வுந்தன்
நெஞ்சமதிலென்ன மோடி சித்தி

### சதாரம் சொல்லல்.

எட்டிநிற்பாயடா மட்டி
படுசுட்டி கையைத்தட்டி
என்னையேனிழுக்கவாராய் கிட்டி அடா
எள்ளத்தனைபுத்தி யுன்னுள்ளத்திநிலேயில்லை
என்னிஷ்டத்தைக்கோருதே போடா உனக்
கட்டமத்துச்சனி யோடா எட்டி

### மாயோன் சொல்லல்.

கச்சணிந்தகொங்கை யாளே
நங்கையாளே மங்கையாளே அந்தக்
காமரதிதங்கை யாளே அடி
காடைப்பறவைகளன்னங் கூடத்தாமதமென்ன
கல்லோசொல்லடிவுன் னெஞ்சம் இன்னும்
கனையாததென்ன வஞ்சம் கச்ச

வசனம்.

கடைசியாக சதாரத்தை யிணங்கச்செய்து மாளிகையில் கொண்டுவந்து வைத்தபின் சதாரம் நாயகனைநினைத்துப் புலம்பல்.

நாதன்வரக்காணேனே என்ற வர்ணமெட்டு.

இ-ம்-தேசிககமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காதலனைப்பிரிந்து கலங்குறேன்தனிமையாய்
பாதகியுயிரை வைத்துப் பாரினிலெவ்வண்ணமுய்வேன் கா

மாரன்வாதையினல்நொந்து மனங்கலங்குறேன்பாவி
தீரமுள்ளயென்கணவன் யெங்குசென்றனனேகூவி கா

அருமைமன்னனிறந்ற அருஞ்சிறையில்நானிருக்க
கருமமென்செய்தேனிந்தக் காசினிதன்னிலே கா

வசனம்.

சுவேதன் காராக்ரகம்விட்டு கானகத்தில்வந்து சதாரத்தைக் காணாது புலம்பல்.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

காணேனே யினிநான்
காணேனே யினிநான்

அநுபல்லவி.

காவனந்தனில்வைத்த கண்மணியேயுன்னை கா

சரணங்கள்.

யேனேயென்னைமறந்து யெவ்விடம்சென்றாயோ
மானேசதாரமெங்கே மறைந்திருக்கிறாயோ கா
உன்னுசையாலே வுலகத்தைதோற்றுமென்
அன்னைதந்தையிழந்து அலைகிறேன்சதாரம் கா

சுவேதன் புலம்பிக்கொண்டு சதாரமிருக்கும்
மாளிகையை நாடிச்செல்லல்.

சிவமேஎந்தனை யேன்படைத்தாயென்ற வர்ணமெட்டு.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஹரியே என்றனை யாதரியே ஓம் ஹரி

கரிமுதல்வனே யென்றழைத்திடக்
கார்த்தவா துயர்தீர்த்தவா
கார்த்தவா துயர்தீர்த்தவா மனம்
பூர்த்தியாயெனைச் சீர்த்தியாயாள ஹரி

திருவே சற்குருவே
கருமவினைகள் செய்திருந்திடினுமெனைக்
காவாயா கெதியானாயா
காவாயா கெதியானாயா வினை
தீராயா கண்ணால்பாராயா ஓம் ஹரி

சுவேதன் சதாரமிருக்கும் நேரில் புலம்புதல்.

சதாரம் சொல் கண்ணிகள்.

மன்னாநானென்னசெய்குவேன்
மானிலத் தெவ்வாறுய்குவேன் ஆசை மன்

சின்னவயதினிலே யென்னைமணம்புரிந்தீர்
இந்நாள்வரையுமைப் பிரிந்திடவிதியோயென் மன்

சுவேதன் கண்ணிகள் ஷை மெட்டு.

என்னனெதன்கெதியே
யேங்கலாகினேன்விதியே
அன்னையரைப்பிரிந்து அரசுபதியிழந்து
மின்னரசேவுனைப்பிரிந் திந்நாள்மட்டும் என்

வசனம்.

சதாரத்துக்குத் தேறுதல்சொல்லி சதார முத்திரவின்படி பரியையும உடையையும் கொண்டுவந்து வைத்துக்கொண்டு துயிலுகையில் கள்ளன் வருதல்.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கள்ளனும்வந்தானே இந்தக் காவலர்கள்சூழும்நாட்டில்
கன்னம்வைத்திடவந்த கள்ள

அநுபல்லவி.

காலமோகலிகாலம் காலகெதியாலே கஷ்டப்படலானேன்
ஆலமுண்டோனே யனுதினமும்பணிந்திடும் கள்ள

சரணங்கள்.

பஞ்சகாலம்வந்ததினல் நஞ்சைபுஞ்சைவிளைவுமில்லை
பஞ்சாங்கமோதும்பார்ப் பார்கள்விட்டினில்சென்றேன்

அங்கு நீச்சுத்தண்ணி ஆருகாயுந்தவிர
வக்கொன்றுமில்லாது மாளிகைதனைநாடி. கள்ள

கள்ளன் தேவதைகளை வருந்துதல்.

நொண்டிச்சிந்து.

திருடவேபோய்வாரேன் என்னாண்டவனே திருடவேபோய்வா ரேன்-வன-தேவதைகளேசகாயஞ் செய்யவேணும் மயிலாடும் பாறைக் கருப்பா உனக்கு மதுபானங் கோழிமுட்டை வைத்துப்படைப்பேன் பனையடிவாழுங்கருப்பா-உனக்குப்-பள்ளயங்கள் வைத்துமிகப் படைத்திடுவேன் பச்சையாற்றில் வாழுங்கருப்பா-உனக்குப்-பண்புடனே யாடுவெட்டிப் பலியிடுவேன் அம்மாபட்டிக்கருப்பா-உனக்கு-அன்புடனே ரத்தசாதம் அளித்திடுவேன் வைரவா நீதுணையே-உனக்கு-வடதோசை பாணக்குழும் வைத்துப்படைப்பேன் பட்டத்துவிநாயகனே பழந்தேங்காயுடைத்து நான் பூசைசெய்வேன் கோசலைவிநாயகனே-உனக்குக்-கொழுக்கட்டை வடைதோசை கொடுத்திடுவேன் பாதனைவிநாயகனே-உனக்குப்-பச்சிளநீர் கண்திறந்து படைத்திடுவேன் அபரஞ்சிப்பிள்ளையாரே-உனக்கு - அவல்பொரிக் கடலைகள் அள்ளிப்படைப்பேன் மாட்டாந்தம் பிரான்சாமி - உனக்கு-வாழைப்பழந் தேங்காயும் வைத்துப்படைப்பேன் பழனியாண்டவனே-உனக்குப் - பஞ்சாமிர்த அபிஷேகம் பண்ணிவைப்பேன் இடும்பா நீதுணையே-உனக்கு-இளநீரபிஷேகம் இன்பமாய்ச்செய்வேன் பதினெட்டாம்படியானே-உனக்கு பத்துக்குப்பி சாராயம் படைத்திடுவேன் சன்னாசிநீதுணையே - உனக்கு-சந்தனம் விபூதிகொண்டு சாத்திடுவேன் ஐயனார் நீதுணையே-உனக்கு-ஆட்டுக்கிடாய் வெட்டிப்பொங்கல் அன்புடன்செய்வேன் பெரியாவிடையாரே-உனக்குப்-பிரியமா யபிஷேகஞ் செய்வேனே கன்னடியப் பெருமானே-உனக்கு-கன்னியமா யபிஷேகஞ் செய்துவைப்பேன் ஆயிரங்கண் மாரித்தாயே-என்னம்மணி-ஆயிரங்கண்மாரித்தாயே-உனக்கு-ஆட்டுககிடாய் வெட்டிநாளும் பொங்கலிடுவேன் உச்சினிமாகாளித்தாயே-உனக்கு-உச்சிதமாய் கோழிவெட்டிப் பொங்கலிடுவேன் பத்திர காளித்தாயே-உனக்குப்-பச்சைமஞ்சள் சாத்துப்படி பண்ணிவைப்பேன் தாடகை நாச்சியம்மா-உனக்குத்-தங்கத்தாலே சரப்பளி சாத்திடுவேன் மருதகாளியம்மையே-உனக்கு-வச்சிரப்பதக்கமது பூட்டிடுவேன் முத்தாலம்மைத்தாயே-உனக்கு-முத்தினாலே சரப்பளி போட்டிடுவேன் செல்லாண்டி யம்மைநீதுணை-உனக்குச்-சித்ரவர்னப் பட்டுச்சேலை சாத்திடுவேன் அங்காளம்மைத்தாயே-உனக்கு-அஞ்சுவர்னப் பட்டுச்சேலை யணிந்திடுவேன் பெரியாயகித்தானே-உனக்குப்-பீதாம்பரப் பட்டுச்சேலை போர்த்திடுவேன் திருட்டுக் கிடைத்ததானால்-இப்ப-செப்புமொழி தப்பிடாமற் செய்வேனே எல்லோருந் துணையிருங்கள்-நானும் - இப்பொழுதே திருடியே வருவதற்கு காட்டிக் கொடுத்திடாதீர்-இதோ-கையெடுத்துப் புணிகிறேன் தெய்வங்களே-தந்தனத்த

கள்ளன் தேவதைகளை தியானித்தல்.

தென்பரங்குன்றினில்வாழ் தேவர்சிகாமணியே களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு
தென்பழனிமலையினில்வாழ் செங்கைவடிவேலவனே களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக் கொடுத்திடாதே நன்னு நன்னு
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்டதேவா களவாங்கப்போயிட்டாலுங் காட்ட்டிக் கொடுத்திடாதே நன்னு நன்னு
காசிராஜன்பெற்றெடுத்த கர்த்தாவேமதுரைவீரா களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக் கொடுத்திடாதே நன்னு நன்னு
மொட்டக்கோவிரத்தில்வாழும் முனியாண்டிசங்கிலியே களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக் கொடுத்திடாதே நன்னு நன்னு
பதினெட்டாம்படியில்வாழும் பாரக்கருப்பணனே களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு
மதுரைக்குநேர்கிழக்கே மாரியம்மன்தெப்பக்குளம் தெப்பக்குளத்தருகில்வாழும் தேவியென்னைக் காட்டாதே நன்னு நன்னு
சதுரகிரிமலையில்வாழும் சாதுபணிசுந்தரமே களவாங்கப்போயிட்டாலுங் காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

வாடாயெந்தன்கண்மணியே என்ற வர்னமெட்டு.

இ-ம்-கேதாரம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆதிசிவபரம்பொருளே அடியேனுக்கோர்வரமருளே
பாதிமதியணிந்த பரம்பொருளேநீதுணையே — ஆதி
கொள்ளையடிக்கவென்று கோட்டையைச்சுற்றிவாரோன்
சள்ளைகள்வாராமலே தமியேனைக்காத்திடுவாய் — ஆதி
கன்னங்கள்வைத்திடவே காவலர்கள்நாடுசெல்ல
பின்னங்கள்நேரிடாது பின்தொடர்ந்துவருகுவாய் — ஆதி

ஷை தெம்மாங்கு.

கொள்ளையடிக்கவென்று கள்ளைக்குடித்துவந்தேன்
கள்ளைக்குடித்ததினல் கண்கள்ரெண்டும்சொக்குதடி
டிகிடி டிண்டி டிகிடி டிண்டி டிகிடி டிண்டி டீ

வசனம்.

கள்ளன் மாளிகைமுன் துயின்ற அரசகுமாரனுடைய பரியையும் மூட்டையையும் எடுக்கும்போது சதாரம் பார்த்தாவென சைகைசெய்ய கள்ளனும் பிரதிசைகைசெய்ய கணவனென நினைத்து நூலேணிவழியாலிறங்கி கள்ளனுடன் கானகம்வந்து உதயத்தில் பார்த்து பிரமிக்கும்போது கள்ளன் சதாரத்தை வேண்டல்.

கள்ளன் சதாரத்தை வர்ணிக்கும் கவி.

கூந்தல்நிறமோவண்டு நுதல்மதியத்துண்டு
குவளைமலர்விழிகள்ரெண்டு கொங்கைகள்மலர்ச்செண்டு

காலகள்வாழைத்தண்டு மாந்தழிதொனும்பெண்டு
திகழும்வடிவங்கொண்டு வந்துநின்சேர்வைகண்டு
வாழ்த்தியேயானுமே ஆசீர்வதிப்பேனடிமாதங்கமே

தெம்மாங்கு.

சின்னஞ்சிறியகுட்டி சிங்காரமாய்ப்பேசுங்குட்டி
தன்னந்தனியேயிங்கு தானும்வரக்காரணமேன்
தில்லாடாங்கு டாங்குராஜா தில்லாடாங்கு
அருமைசிறியபிள்ளை அன்புமிகக்கொண்டபிள்ளை
கருமைவிழியுமென்றன் காதல்வளர்க்குதடி
தில்லாடாங்கு டாங்குராஜா தில்லாடாங்கு

தெம்மாங்கு.

சின்னஞ்சிரிக்கியுன்னை சேர்ந்திடஆவல்கொண்டேன்
கன்னல்வில்மாரனாலே சின்னபின்னமாகுறேண்டி
தில்லாடாங்கு டாங்குராஜா தில்லாடாங் டாங் டாம்

காவடிச்சிந்து.

இ-ம்-மோகனமுகாரி-தாளம்-ரூபகம்.

ஆத்தோரம்அரளித்தோட்டம் அதினடுவேமேடையொன்று
தோணுதடி அதற்குள்ளேவாடி வெகு
நேர்த்தியுடன்நாமிருவர் ஆத்திரத்துடன்சேருவோம் ஓடி
பஞ்சணையிலிருவருமாய் கொஞ்சிவிளையாடிடவே
பரமனைநினைந்து பதம்பாடியே
அஞ்சலிசெய்திட்டேனெந்தன் சஞ்சலத்தைத்தீர்த்திடுவாய்நாடியே
பெண்ணரசேவுன்னைக்கூட பிரியமாகிவந்தேனடி
பேதையேதயவுசெய்வாய் நீயே என்
யெண்ணமதைப்பூர்த்திசெய்வாய் யேந்திழையேஅறிகுவாயே

சதாரத்தினிடம் கள்ளன் தன் பராக்ரமங்கூறுதல்.

இ-ம்-கேதாரம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தந்தானமடி தந்தானமடி தந்தானக்குயிலே
தந்தானமடி தந்தானமடி தந்தானக்குயிலே

கோட்டைகொத்தளமீதிலானாலுங் கூசாமலேறிடுவேன்
கொற்றவர்கண்டுபிடிக்கவந்தால் குதித்திடுவேன் தந்

கருங்கல்லினாலசுவரானாலுங் கன்னம்வைத்திடுவேன்
காவலர்கண்டுபிடிக்கவந்தால் கத்தியால்குத்திடுவேன் தந்

பக்காத்திருடனென்றொரு பயில்வானிருந்தான் அதிலு
முக்கால்திருடன்நான்தான் அழகில்நான்தானே தந்

சதாரம் சொல்லல்.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கேவந்தாயோடா எனைத்தொடர்ந்து எங்

அநுபல்லவி.

பங்கப்படுத்தவென்னை பாவியேகருதினையே
அங்கமிகவாடுதே அடவியிலிப்போதே எங்
மன்னவனைப்பிரிந்த மாபாவியானவென்னை
சின்னவார்த்தைகள்பேசி சிநேகில்லாதேதோசி எங்

கள்ளனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

உன்னைவிட்டுப்பிரியவில்லை யொருவர்முகம்பார்க்கவில்லை
என்னைவிட்டுநீபிரிந்தால் இடுவேனுன்கைவிலங்கு
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுசோருதடி-

சதாரம்.

உன்னைவிட்டொன்பிரிந்து ஒருவர்முகம்பார்த்தால்நான்
கைவிலங்குபோட்டாயானால் காசிதனிலிங்கமாவேன் ந

கள்ளன்.

கைவிலங்குபோட்டேனென்று காசிலிங்கமாயிருந்தால்
பட்டரைப்போல்நானும்வந்து பக்தியுடன்பூசைசெய்வேன் ந
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுஞ்சோருதடி-

சதாரம்,

பட்டரைப்போல்வந்துநீ பக்தியுடன்பூசைசெய்தால்
மூக்திகொடுத்திடுவேன் மூடனேநீபூசித்தாக்கால் ந

கள்ளன்.

ஊராருரங்கிடுவார் உன்புருஷன் தூங்கிடுவான்
நல்லபாம்புவேடங்கொண்டு நான்வருவேன்சாமத்திலே ந
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுஞ்சோருதடி

சதாரம்.

நல்லபாம்புவேடங்கொண்டு நலமுடனேவந்தாயானால்
நான் ஊர்க்குருவிவேடங்கொண்டு உயரப்பறந்திடுவேன் ந

கள்ளன்.

ஊர்க்குருவிவேடங்கொண்டு உயரப்பறந்தாயானால்
செம்பிராந்துவேடங்கொண்டு செந்தூக்காய்தூக்கிடுவேன் ந
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுஞ்சோருதடி

சதாரம்.

செம்பிராந்துவேடங்கொண்டு செந்தூக்காய்தூக்கவந்தால்
நான் பூமியில்நுழைந்துகொண்டு புல்லாய்முளைத்திடுவேன் ந

கள்ளன்.

பூமியில்நுழைந்துகொண்டு புல்லாய்முளைத்தாயானால்
காராம்பசுவேடங்கொண்டு கரும்பிடுவேன் அந்தப்புல்லை
அன்னமே பொன்னம்மா யெனனமோ கண்ணிரண்டுஞ்சோருதடி

சதாரம்.

காராம்பசுவேடங்கொண்டு கரும்பினால் அந்தப்புல்லை
பூத்தோட்டந்தன்னில் ஒரு பூவாய்முளைத்திடுவேன்

கள்ளன்.

பூந்தோட்டந்தன்னில்ஒரு பூவாய்முளைத்தாயானால்
பூவெடுக்கும்ஆண்டியைப்போல் பிடுங்கிடுவேன் அந்தப்பூவை
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுஞ்சோருதடி

சதாரம்.

பூவெடுக்கும்ஆண்டியைப்போல் பிடுங்கினாலந்தப்பூவை
மானுருவமெடுத்துக்கொண்டு மறைந்திடுவேன்கானகத்தில்

கள்ளன்.

மானுருவமெடுத்துக்கொண்டு மறைந்தாயானால்கானகத்தில்
வேடனாகிநானுமுன்னை விரட்டிடுவேன்கானகத்தில்
அன்னமே பொன்னம்மா யென்னமோ கண்ணிரண்டுஞ்சோருதடி

வேறு கள்ளன்.

உல்லூருவங்கனமே வுல்லாசக்கார தங்கம்
என்னைவிட்டுப்பிரிந்தாயானால் வெட்டிடுவேனுந்தனைநான்

சதாரம்.

விட்டுப்பிரிந்தேனென்றும் வெட்டினையானால்யெந்தனை
புத்தாய்முளைத்துயானும் பிடுங்கிடுவேன்உந்தனைநான்

கள்ளன்.

புத்தாய்முளைத்துநீயும் பிடுங்கினையானால்யெந்தனை
மந்திரத்தினால்செபித்து மயக்கிடுவேனுந்தனைநான்

தர்க்கம்-காவடிச்சிந்து.

சொர்ணம்நிறைந்திருக்குடமோ மனதிடமோ இதுஅடமோ எனைச்
சொக்கிடும்சுந்தரப்படமோ
சொல்லியும்தாமதமென்னடி கருங்கல்லோ உன்மனமாமோடி (னே
கொஞ்சமுஞ்சகித்திடேன்நானே உன்னைக் கூடிடவிச்சை கொண்டே

சதாரம்.

வேதனைசெய்யாதேவேடா வெரியோடா
சரியோடா நல்ல வெட்கங்கெட்டமுழுமூடா நீ
வேறுமொழிசொல்லாதே யிங்கே தானுமாருகப்பேசாதே
வேண்டாமடா யிந்ததாபம் எனைத தீண்டாதடாவெகுபாபம்

கள்ளன்.

என்னடி என்னைநீ கூடி விளையாடி
சுகந்தாடி மிக யேங்கித்தவிக்கிறேன்வாடி
இன்னம் செய்யாதேவாதுஉன்மனமிரங்கலையோயிப்போது
யேதுக்குமஞ்சாதேமாதே எனைத் தாவியணைவாயிப்போதே

சதாரம்.

என்னவார்த்தைசொன்னாய்போடா நீதியோடா
நியாயமோடா இன்னமேற்கிலையோ குடிகேடா
யெத்தனைதான்புத்திகள் பத்தினிநான்சொல்லியும்
யேனடா பினத்துராய்வீசி உனக்கேற்காதடா கெட்டத்தோசி

கள்ளன்.

சுந்தரமேகண்ணேவாடி உன்னைத்தேடி
இங்குநாடிமிகச் சொந்தமாகவே நாம்கூடி வெகு
சொகுசாகவே மதனலீலைகள் விரசாகவே புரிந்திடலாம்
தோகையே கண்ணே நீவாடி நல்ல தோடிராகங்களைப்பாடி

சதாரம்.

எட்டிநிற்பாயடா பட்டி முழுமட்டி
சிறுகுட்டி இது எங்கேகற்றாயடா கெட்டி
யெத்தனையோஞானங்கள் சித்தத்திலறிந்தும்நீ
யேதுக்கடா வாதுபேசி என்னை ஏனிப்படிப்பிடிக்கிறாய் சீசீ

கள்ளன்.

சுந்தரமோகினிமாதே யேனிவ்வாதே
செய்வதேதே அதிசுகிர்தம் வருமிப்போது
பரிசுத்தமாகிய பஞ்சணைமெத்தையில் கூட பற்பல
சுரதங்கள்செய்யலாம் வாராய் மதன்ரதியைப்போல்நாம்நேராய்

தெம்மாங்கு.

இருக்கத்தானிடமுண்டோ யிந்திரனேஉன்னரகில்
படுக்கத்தான்பாயுமுண்டோ பாண்டியனேஉன்னாட்டில்

கட்டிலுண்டுமெத்தையுண்டு டுண்டுனக்கடிடுண்டும்
காலமுக்கதாதியுண்டு டுண்டுனக்கடிடுண்டும்

சதுரகிரிமலையோரம் டுண்டனக்கடிடுண்டும்
சார்ந்திருக்கும்திருகுகள்ளி டுண்டுனக்கடிடுண்டும்

திருகுகள்ளிபூவெடுக்க டுண்டுனக்கடிடுண்டும்
திரிந்தேன்நான்சிலகாலம் டுண்டுனக்கடிடுண்டும்

வாலவயதுக்காரி தங்கமே தங்கம்
  வலதுபுரம்கொண்டைக்காரி தங்கமே தங்கம்
ஒருமுடிக்கும்கொண்டையிலே தங்கமேதங்கம்
  யின்றைக்கு புல்லுவைக்கநாளாச்சு தங்கமேதங்கம். ச

கானமயிலேயுன்னை நிண்டுனக்கடிடுண்டும்
  கைவிடலேயென்றுசொல்லி டுண்டுனக்கடிடுண்டும்
மீனாட்சிகோவிலிலே டுண்டுனக்கடிடுண்டும்
  வேட்டிபோட்டுதாண்டித்தாரேன் டுண்டுனக்கடிடுண்டும். ரு

அத்திமராமுமாவேன் டுண்டுனக்கடிடுண்டும்
  அத்தனைக்கும்பிஞ்சுமாவேன் டுண்டுனக்கடிடுண்டும்
என்னைச்-சுத்திவரும்பெண்களுக்கு டுண்டுனக்கடிடுண்டும்
  மூத்துசமுமாவேன் டுண்டுனக்கடிடுண்டும். சு

வசனம்.

சதாரம் கள்ளனைத் தண்ணீர் கொண்டுவரச்சொல்லி சரசம் செய்குதல்.

---

தாயேபிராமிநீ சமைப்பங்காரம்மணி என்ற வர்னமெட்டு.

இ-ம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நடக்கக்கால் நோகுதே நாவுலர்ந்து போகுதே
திடமுடனே வுந்தனில் லந்தனக்கேகவே நட
தண்ணி கொணர்ந்தால்நீயு மெண்ணின படிக்கே
மணமிசை யுந்தனை மகிழவே சேருவேன் நட
மங்கைசதார மெனமானிலத் தோருரைப்பார்
இங்கிதகுண முள்ளவென் னுயிர்த்துணைவனே நட

வசனம்.

நித்திரை நீங்கிய சுவேதன் பரியையும் பாரியையுங்காணாது புலம்பல்.

இ-ம்-தேசிகமுகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னமாயம் யெவரின்சூதோ யேதுமறிகிலேன் நானே
பொன்கொடுத்து வாங்கிவந்த புரவியோ டுடையுங்காணேன் எ
ஊன்னிழந்து ஊரிழந்து உற்றாரைத் தான் துறந்து
அன்னை தந்தையர்களை அன்னசத்தி ரத்தில்வைத்து எ
யேகபோக லீலைசெய்யும் யேந்திழையா ளேயின்று
யேகாக்கியா யென்னைவைத்து யேகநீமனந்துணிந்தாய் எ
எங்குசென்று தேடுவேனோ எப்போதுன்னைக் கூடுவேனோ
இங்கிர்த குணத்தாளே யென்தனை மறந்தாயோடி எ

---

வசனம்.

சதாரம் திருடனைத் தப்பி வரும்வழியில் ராஜகுமாரன் மந்திரிகுமாரன் இருவரும் வழிமறித்துநிற்பதைப்பார்த்துப் புலம்பல்.

---

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

வழிமறித்தேநிற்கிறார் மானிடரிருவர் வழி

அனுபல்லவி.

கள்ளனைத்தண்ணீர் கொண்டுவாவென்றே
நயமாகவேயுரைத்து நானுமிக்கானில்வர வழி

சரணங்கள்.

என்செய்குவேனிவரை யெப்படித்தப்புவேன்
அநீதம்புரிவார்களோ அறிவைதனைக்கண்டு வழி

## இராஜகுமாரன் சதாரத்தை வர்ணிப்பது.

வாசுதேவனே வந்தாளுமெந்தனை என்ற வர்னமெட்டு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

என்னமாயமோ இங்கின்றிவளைக்காணவே
கன்னல்மாரனும் கணையாலெய்குறான்
எந்ததேசமோ யிவளெங்குவாசமோ
மந்தஹாசமாய் வருகிறாளென்முன்

## மந்திரிகுமாரன் சதாரத்஬்தை வர்ணிப்பது.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இவளாரோ நங்கையோ யென்னுசைமீறுதே
ஆசைமீறுதே யென் கண்கள்சோறுதே
எந்ததேசமோ பெண்ணு ளெங்குவாசமோ
எங்குவாசமோ யிவள் சந்த்ரகாந்தியோ
துடைவாளையோ தோடுகன்னலோ
தோடுகன்னலோ வானில் தோன்றுமின்னலோ

## இராஜகுமாரனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

மானைப்பிடியே வனக்கிள்ளையே மடமாமயிலே குயிலே
யென்ற வர்னமெட்டு.

எதிரிடை கண்ணிகள்.

இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

இராஜகுமாரன்.

விண்ணமுதே யெந்த னுள்ளமுதே
விபரீதவிசித்திரமே

சதாரம்.

விண்ணமு துள்ளமுதான
விசித்திரமேனி யுடையதோர்வேந்தனே

இராஜகுமாரன்.

கொண்டலையேவென்று எண்டிசையும்புகழ்
கொண்டகுழல் மாதே

சதாரம்.

கொண்டலைக்கூந்தற்கு நேரெனக்கூறிடிற்
கோதாய்ச்சிதறுமே வேந்தனே

இராஜகுமாரன்.

மூன்றாம்பிறைதனை வென்றநுதலுடைய
மூதறிவான பெண்ணே

சதாரம்,

மூன்றாம்பிறைநிகர் நெற்றியென்று
மொழிந்தாலது தேயுமேவேந்தனே

இராஜகுமாரன்.

சிதகுளத்தி லுறுங்கயலைவென்ற
சிறுர்கயனப் பெண்ணே

சதாரம்.

சேதருளக்கயல் ஞாலமுள்ளார்வலை
சிக்கிவருந்துமே வேந்தனே

இராஜகுமாரன்.

செங்கமலமதைத் துங்கமாய்வென்ற
திகழ்முக மாதரசே

சதாரம்.

செங்கமலமது திங்களைக்கண்டாக்காற்
செவ்விதழ்மூடுமே வேந்தனே

இராஜகுமாரன்.

அந்தமுள்ள கனகக்கிரிதன்னை
உடர்த்த முலைக்கண்மணி

சதாரம்.

அந்தமுள்ளகிரி முன்னாட்சிவன்கரத்
தாலேவளைந்தது நாதனே

இராஜகுமாரன்.

எந்தவிதத்திலு முந்தனைவெல்லுவே
னேந்திழையேயெந்தன் கண்மணி

சதாரம்.

அந்தப்பூச்சியிங்கே காட்டாமலேநீயு
மப்பாலேயேகுவாய் வேந்தனே

இராஜகுமாரன்.

சந்ததங்கல்யாண சுந்தரன்பதம்பாடிச்
சல்லாபமாய்ச்சேர்வோம் பெண்ணே

சதாரம்.

இந்தவசனம்நீர் வந்தபோதேசொன்னு
லிந்தவாதேதுக்கு வேந்தனே

## மந்திரிகுமாரனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மந்திரிகுமாரன்.

வாதாடுவதாகாது மாதே மோகந்தணியாது
மாரன்கணை பொல்லாது மருவிச்சேரத் தருணமிது வா

சதாரம்.

புத்தியில்லாமட்டியே பூதம்போலத்தட்டியே
புலம்புருயேகிட்டியே போடா அப்பாலெட்டியே புத்

மந்திரிகுமாரன்.

காமன்கணைபொல்லாது காணேன் துணையுனையல்லாது
காதலதீர்ப்பாயில்லாது கண்ணே தடைசொல்லாது கா

சதாரம்.

என்னசொன்னாலும்மூடா யேற்காததழகோடா
இன்னும்நின்றால்குடிகேடா எட்டியுதைப்பேண்டாபோடா

மந்திரிகுமாரன்.

எட்டியுதைத்தாலேபாக்யம் யெந்தனுக்கதுசிலாக்யம்
இன்பமாயொருவாக்யம் பின்புசேர்ந்தாலேயோக்யம் எ

மந்திரிகுமாரன்.

தேடிவந்தேனடிமானே தியங்குதென்மனந்தானே
தெண்டம்செய்குவேன்நானே சேர்ந்தணைகுவாய்தேனே தே

சதாரம்.

வீணாய்நின்றடாநீயே விரகமேற்கொண்டுபேயே
மேன்மைவார்த்தைசொன்னாயே வெட்கங்கெட்டுப்போனாயே

மந்திரிகுமாரன்.

ஆசைவெட்கமறியாது அறிந்தோர்கள்சொல்வாரிது
அன்னமேநீயிப்போது ஆதரவாய்ச்சேர்மாது ஆ

சதாரம்.

தாசன்கல்யாணசுந்தரன் தண்டமிழ்தேருந்தந்தரன்
மாசில்லாப்பதம்பாடா மட்டியேதூரம்போடா மா

வசனம்.

இராஜகுமாரன் மந்திரிகுமாரன் இருவரையும் தடாகம்சென்று புஷ்பமெடுத்துவரச்செய்து தான் தனியே காட்டிற்போய் புலம்பல்.

பஞ்சமாபாதகம் படராதோ என்ற வர்ணமெட்டு.

இ-ம்-தனசரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இனியாரெனக்குசெல்வேன் ஜெகதீசா-எந்தன்
இறைவனிரக்காணுது வுமைநேசா
தனியாய்மனதுநொந்து வாடுகின்றேன்மன்னன்
சஞ்சரிக்கு மிடத்தைத் தேடுகிறேன்
பன்னகத்தின் வாய்பட்ட தேரைபோலே-மனம்
பரதவித்திட லுற்றேன் புவிமேலே
சண்டாளனுனேயென்றே நினைந்து-மன்னன்
சடலத்தை மடித்தாரோ மனதுநொந்து
கண்டோமென்றொருவர் சொல்லக்காணேனே-இந்தக்
கஷ்டதிசைக்குள் எயன் படைத்தானே

வசனம்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டு நித்யகல்யாணிப்பட்டணம்வந்து அம்மையார்க்கிழவி யகத்தில் புசித்திருக்கையில் அன்னவள் மகனுடைய முறைக்காக சதாரம நித்யகல்யாணியிடம்சென்று பாணிக்கிரஹணம் செய்துக்கொண்டு சுகமாய் மருவச்சொல்ல சர்ப்பமாய்வந்த சங்காவினைச்சிதைத்து விமோசனமளித்து அதன்பின் தன்போல் படமொன்றையச்செய்து நாலுகோட்டைவாயிலும் ஸ்தாபிக்கச்செய்து அதனைக்கண்டு யாரார புலம்புகிறார்களோ அவர்களை பந்தோபஸ்தாய்வைக்கச்செய்து அந்தப்புரஞ்சென்றனள் அதன்பின் மாயோன் கள்ளன் இராஜகுமாரன் மந்திரிகுமாரன் சுவேதச்சந்திரன் ஐவரும் தேடிவருதல்.

## மாயோன் தேடிவந்தல்.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

எந்தனருமைக்கன் மணியைக்காணேனே
இந்தஆபத்துக் கென்னசெய்வேனே
மண்டலத்தி லிவளைப்போலுண்டோ
மங்கைவார்த்தை மதுரக்கற்கண்டோ
சொந்தமாய் வந்தாளென்றிருந்தேன்
இந்தச்சூது செய்வாளென்றறியேன்

## கள்ளன் தேடிவருதல்.

நடக்கக்கால் நோகுதையோ யென்ற வர்னமெட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தண்ணிகொண்டுவாவென தைரியஞ்சொல்லிச்சென்ற
தையல்தனைக்காணேனே சிவமே
மண்மிசையெனைப்போலவே மகாபாவியாருமுண்டோ
வாடுறேன்பசியாலே தெய்வமே
பெண்மயக்கந்தலைக்கேறி பித்தனைப்போலவே
யெண்ணமுமாறுதே ஈசா

## இராஜகுமாரன் தேடிவருதல்.

ஆரணயத்தில் ஓரரசன் நித்திரைசெய்யவே என்ற வர்னமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

எங்குசென்றுதேடுவேனோ யேந்திழையாளே
பொங்குங்காம வெள்ளம்போகப் பூவையேயுன்னை எங்
மங்களமாய் மாலையிடுவே னென்றுரைத்தாயே
மன்னவனுன் னாசையாலே மதிமயங்கியே எங்
எந்தன்முன்னே சொன்னவாறு புட்பமேந்தியே
வந்துவுன்னைக் காண்போமென்றால் வழியறியேனே எங்

## மந்திரிகுமாரன் தேடிவருதல்.

இ-ம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பரநாரியை நம்பலாகா தையையோ பர

அநுபல்லவி.

கரத்திலேந்தி முத்தமிட்டு கைநழுவ விடுவாளையோ பர

சரணங்கள்.

வஞ்சிநல்லவார்த்தையாடி கொஞ்சிடுவாளையையோ
நெஞ்சில்சூதுநினைந்துநம்மை நீக்கிடுவாளையையோ பர
கட்டிலின்கீழ்வைத்தொருவனை கதவிடுக்கினில்வைத்தொருவனை
கண்கட்டிவித்தைகள்செய்து கதறவிடுவாளையையோ பர

## சுவேதச்சந்திரன் தேடிவருதல்.

இ-ம்-சாமா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்தவிதியெனக்கு எப்படிக்குபிரம்மன்
எந்தனை வகுத்தனனோ வகுத்தனனோ இ

தந்தைதாயைப்பிரிந்து தனியாகவேயலைந்து
சிந்தைகலங்கிடவோ கலங்கிடவோ இ

மங்கைசதாரமுன்னால் மானகர்விதியிழந்து
அங்கம்நொந்துவாடிடவோ வாடிடவோ இ

ஐயையோசிவமே ஆதரிப்பாய்தவமே
மெய்பதறுதேபவமே பவமே இ

வசனம்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டுவந்த ஐவர்களையும் அழைத்து வரும்படி உத்திரவுசெய்ய எல்லோரும் வந்தார்கள் மாயோன் அரசனாகவிருந்தும் இராஜநீதி தவறாமல் அரசுபுரிவதைவிட்டு பரதாரத்தை விரும்பினதால் அவனை கடுங்காவலில் வைக்கும்படிக்கும் கள்ளனுக்கு வேண்டிய நிதியளித்து அனுப்பும்படிக்கும் இராஜகுமாரன் மந்திரி குமாரனிருவரையும் தகுந்த புத்திசொல்லி அனுப்பிவிட்டு சுவேதச் சந்திரன் பட்டாபிஷேகஞ்செய்துக்கொண்டு சுகமாய் உஜ்ஜீவித்திருந் தார்கள்.

## மங்களவாழ்த்து.

இராஜாதிராஜர்பணி என்ற வர்னமெட்டு.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாமறையோர்வாழ்க மணிமன்னர்குலம்வாழ்க
மானிலத்திலேநிறைந்த மற்றையரும்வாழ்க மா

ஏடவிழ்பொன்மறைகள் இலங்குநடத்திவரும்
எந்தைவிநாயகர்முருகேசனிதம்வாழ்க மா

கூடல்நகர்வாழ்க குன்றவில்லிதினம்வாழ்க
கூறுமீனலோசனியும் கூடிநிதம்வாழ்க மா

இந்தியாசக்ரவர்த்தி யெட்வர்ட்மகாராஜர்வாழ்க
அந்தமாயன்னவராளும் அகிலமெல்லாம்வாழ்க மா

பூவைசதாரத்தின் புகழ்போற்றிவிளையாடும்
பாவலர்கள்முதலானோர் பாங்குடனேவாழ்க மா

செங்கெல்கன்னலோங்குந் திருப்பூவனந்தனில்வாழும்
நண்பன்லக்ஷ்மணதாசன் நன்குடனேவாழ்க மா

சுபம் சுபம் சுபம்.

மனோரஞ்சித உபாக்யானமென்னும்

சதாரம் சரித்திரம் முற்றிற்று.

---